முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.35/2018**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 20.08.2024 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.S.Suganiya Sri, B.A.B.L., (Hons),M.L.,PGDAML. அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 20.08.2024 | சாட்சி | வா.சா.2 |
| பெயர் | கணேசன் | வயது.. | 67 |
| தந்தை பெயர்.. | வேலாயுதம் | கிராமம்.. | சிதம்பரம் |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 1,2,3,4 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை ...**

1. என் மனைவி பெயர் அமுதா என்றால் சரிதான். அன்னலட்சுமி மற்றும் ஐயப்பன் என் மகள் மற்றும் மகன் என்றால் சரிதான். நான் கூரை வீட்டில் இருப்பதாக சொல்லிய நிலையில் அதனை தொடர்ந்து எத்தனை வீடுகள் இருக்கும் என்றால் 15 வீடுகள். கூரை வீட்டிற்கு முன்பு தரை வாடகையில் இருந்தேன் என்பதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. நான் தரை வாடகைக்கு இருந்த இடம் நடராஜ நாடாருக்கு பாத்தியம். ஜெய்சுந்தர் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ஜெய்சுந்தர் புத்திசுவாதினம் இல்லாமல் இருந்தாரா என்றால் ஒரு நேரம் நன்றாக பேசுவார் ஒரு நேரம் அமைதியாக இருப்பார். ஜெய்சுந்தர் தானாக கடைக்கு சென்று பொருட்கள் வாங்குவாரா என்றால் வாங்குவார்.

2. நான் இருந்த இடத்தை ராதாவிடம் இருந்து மக்கின் கிரயம் வாங்கிவிட்டார். கிரயம்பத்திரம் பதிவாகிவிட்டதா என்றால் பதிவாகியதாக சொல்லப்பட்டது ஆனால் எனக்கு நேரடியாக தெரியாது. என்னிடம் காட்டப்படும் 30.07.2022 தேதியிட்ட உள்ள கையெழுத்து என்னுடைய மற்றும் என் மனைவி அமுதாவின் கையெழுத்து தான் என்றால் சரிதான். (அந்த கையெழுத்து **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது, இந்த ஆவணம் குறியீடு செய்யும்போது வாதி தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது. ஆட்சேபணை எதற்காக என்றால் அந்த

ஆவணத்தில் கையெழுத்து மட்டும் தான் ஒப்புக்கொள்ளப்பட்டது என்பதற்காக. பி.வா.சா.ஆ.2 ஆவணம் Subject to proof and relevency குறியீடு செய்யப்பட்டது) அந்த ஆவணத்தில் அனுபவ பாத்திய விடுதலை பத்திரத்தில் ரூ.50,000/- -ற்கு அனுபவ பாத்தியத்தை 3 ஆம் பிரதிவாதியான ராதாவிற்கு விட்டுக்கொடுத்துவிட்டேன் என்றால் இல்லை. கிரயம் வாங்கிய மக்கின் சொத்தை அனுபவத்தில் எடுத்துக்கொண்டாரா என்றால் தெரியாது.

3. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் ஒன்றாவது புகைப்படத்தில் ராதா, அவர் கணவர், அதற்கு ஜீவாவின் கணவர் , ஜீவா ஆகியோர்கள் இருக்கிறார்கள். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் கடைசி புகைப்படத்தில் உள்ள ராதாவின் அக்கா ஆனந்தியின் புகைப்படம். ஆனந்தி ஜீவாவிற்கும் அவர் கணவருக்கும் பாதபூஜை செய்கிறார் என்றால் சரிதான். ராதா மற்றும் அவர் அக்காவின் திருமணத்திற்கு நான் சென்றுள்ளேனா என்றால் இல்லை. காலிமனைக்கு பக்கத்தில் ராதாவின் கல் வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டில் ராதா அவருடைய குடும்பத்துடன் எவ்வளவு வருடமாக வசித்து வருகிறார் என்றால் 40 வருடங்கள். நடராஜ நாடார் இறந்ததற்கு யார் இறுதி காரியம் செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது, பாலசுந்தரம் செய்தாரா என்றால் எனக்கு தெரியாது.

4. தரை வாடகை கொடுத்து நான் வழக்கு சொத்தின் ஒரு பகுதியில் இல்லை என்றாலும், ராதாவிடம் தான் தரை வாடகை கொடுத்து இருந்தார் என்றாலும் சரியல்ல. ஜீவாவிடம் வாடகை கொடுத்து இருந்ததாக சொல்லிய நிலையில் எவ்வளவு கொடுத்தேன் என்றால் ரூ.100 மாதம் மாதம் கொடுத்தேன். நடராஜ நாடாரிடம் வாடகை கொடுத்துள்ளேனாஎன்றால் ரூ.100 வாடகை கொடுத்துள்ளேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் முத்துமாணிக்க நாடாருக்கு மோகன். ஜீவா, சேகர், ஜெய்சுந்தர், ஜெயந்தி ஆகியோர்கள் தான் வாரிசுதாரர்கள் என்று குறிப்பிட்டுள்ள நிலையில் அதை பற்றி தெரியுமா என்றால் அவ்வாறு நான் எதுவும் கூறவில்லை. நான் எங்கு தற்போது குடியிருக்கிறேன் என்றால் சிதம்பரத்தில் மீன் மார்க்கெட் சந்து, அது யாருடைய வீடு என்றால் மக்கின் தம்பி வீடு. ஜீவா அழைத்ததன் பேரில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை...**

ஜீவாவிற்கு உடன் பிறந்தவர்கள் யார் என்றால் மோகன், சேகர், ஜெய்சுந்தர், ஜெயந்தி. முத்துமாணிக்க நாடார் யார் என்றால் எனக்கு தெரியாது. ஜீவாவிற்கு மேலே

குறிப்பிட்டுள்ள சகோதர சகோதரிகளை தவிர வேறு யாராவது இருக்கிறார்களா என்றால் எனக்கு தெரியாது.

**மறுவிசாரணைக்கு குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-S.Suganiya Sri,
Principal District Munsif (FAC)
Chidambaram.